செ.வெ.எண்: 34/2020 நாள்: 21.01.2020

# 35 மகளிருக்கு மின்சார ஆட்டோ (Electric Auto) வாகன ஓட்நர் பயிற்சி மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்தார்...

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகராட்சி, ராமலிங்கநார் பிரதான சாலையில் அமைந்துள்ள இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் இன்று (21.01.2020) 35 மகளிருக்கு ரூ.3.00 இலட்சம் செலவில் 30 நாட்கள் (21.01.2020 முதல் 24.02.2020 வரை) நடைபெறும் மின்சார ஆட்டோ (Electic Auto) வாகன ஓட்டுநர் பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்தியன் வங்கி மண்டல மேலாளர் திரு. ஏ. ராஜாராமன், துணை மண்டல மேலாளர் திரு. எம். சுப்பிரமணியன், திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் திருமதி. சந்திரா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. எஸ். இளவரசு, அரசு அலுவலர்கள் மற்றும் பயிற்சி பெறும் மகளிர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது ‘மகளிர் திட்டம் மூலமாக பெண்களுக்கு தையல் பயிற்சி என வழக்கமான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது புதிய முயற்சியாக e-Auto வாகன ஒட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி சென்னையை அடுத்து, மாவட்டங்களில் முதல் முறையாக திருவண்ணாமலை மாவட்டத்தில் முதல் கட்டமாக 35 மகளிருக்கு அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி முடிந்தவுடன் நீங்கள் தொழில் முனைவோராகவும், வேலைவாய்ப்பும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலமாக உங்களுக்கு உறுதியான வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

தூய்மை நகரம் (Clean City) என்ற அடிப்படையில் இந்த மின்சார ஆட்டோ திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது பெட்ரோல், டீசல் ஆட்டோக்களின் பயன்பாட்டில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பும், பராமரிப்பு மற்றும் இதர செலவுகள் கூடுதலாகவும் ஆகிறது, இதனால் பயணக்கட்டணமும் அதிகமாக இருக்கிறது. தற்போதுள்ள ஆட்டோக்களில் ரூ.10 கட்டணம் வசூலிக்கப்பட்டால் அதில் செலவுகள் போக ரூ.2 இலபமாக ஓட்டுநர்களுக்கு கிடைக்கிறது, ஆனால் மின்சார ஆட்டோ மூலம் ரூ.10 கட்டணத்தில் ரூ.6 லாபமாக கிடைக்கும். திருவண்ணாமலையில் மின்சார ஆட்டோக்கள் பயன்பாட்டிற்காக பேட்டரி சார்ஜ் நிலையம் (Battery Charge Station) அமைக்கப்படும்.

இப்பயிற்சியின் வாயிலாக மின்சார ஆட்டோ வாகனம் எளிதாக ஓட்டக் கூடியதாக இருக்கும். பெண்கள் தன் நம்பிக்கையுடன் பயிற்சி எடுத்துக்கொண்டால் எளிதாக வாகனம் ஓட்டுவதற்கு கற்றுக் கொள்ளலாம், பயிற்சி முடித்தவுடன் நம்பிக்கையுடன் உங்கள் வாழ்க்கையை பார்க்கலாம். இத்திட்டம் மூலம் காலப்போக்கில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மின்சார ஆட்டோ ஓட்டுவதில் 50% பெண்களின் பங்களிப்பு இருக்கும். மேலும், பயிற்சி முடிந்தவுடன் மின்சார ஆட்டோ வாங்குவதற்கு மானியத்துடன் வங்கி கடனுதவி அளிக்கப்படும். வேலைவாய்ப்பு எதிர்பார்பவர்களுக்கு தற்போது 10 பெட்ரோல், டீசல் ஆட்டோக்கள் மின்சார ஆட்டோகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது அந்த ஆட்டோக்ககள் மூலம் உங்களுக்கு வருமானம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டும் வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் உங்களின் பொருளாதாரம் வளர வேண்டும் என்பதாகும்’ என்றார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.